සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
**Geography I**

22 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*


சுட்டெண் : ......................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
※ பகுதி **I, 30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
குறிப்பு **:** பென்சிலால் எழுதப்படும் விடைகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
※ பகுதி **I** மற்றும் பகுதி **II** ஆகியவற்றுக்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

பகுதி I

1. தரைத் தோற்றத்தின் ஐந்து அம்சங்களைக் காட்டும் வரைபடத்தின் சரியான வரிசை A, B, C, D மற்றும் E இனால் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.





A B C D E

(1) இடைவெளி, வெட்டுண்ட மேட்டு நிலம், கூம்புக் குன்று, நெடுங்கோட்டுக் குன்றுகள், குறுக்குப் பள்ளத்தாக்கு
(2) குத்துச்சரிவு, கூம்புக் குன்று, மேட்டு நிலம், குறுக்குப் பள்ளத்தாக்கு, இடைவெளி
(3) குத்துச்சரிவு, மேட்டு நிலம், கூம்புக் குன்று, நெடுங்கோட்டுக் குன்றுகள், இடைவெளி
(4) சமச்சீரான பள்ளத்தாக்கு, கூம்புக் குன்று, வெளியரும்புப் பாறை, நெடுங்கோட்டுக் குன்றுகள், குத்துச்சரிவு
(5) குவிவுச் சாய்வு, தனியாக்கப்பட்ட குன்று, கூம்புக்குன்று, நெடுங்கோட்டுக் குன்றுகள், மலைக் கணவாய் (.........)

2. 1 : 50 000 இடவிளக்கப் படங்களில் காட்டப்பட்டுள்ளது போன்று பின்வரும் விடைகளில் எது இரண்டு தரைத்தோற்ற அம்சங்களையும், இரண்டு வடிகால் அம்சங்களையும் தருகின்றது ?
(1) V வடிவப் பள்ளத்தாக்கு, வெட்டுண்ட மேட்டு நிலம், மியாந்தர், குவிவுச் சாய்வு
(2) நீர்ப்பிரி நிலம், வெட்டுண்ட மேட்டு நிலம், குவிவுச் சாய்வு, தீவு
(3) சங்கமம், பிணையல் சுவடுகள், மலைக் கணவாய், நீர்ப்பிரி நிலம்
(4) மியாந்தர், பனியெருத்தேரி, சங்கமம், பானைக் குழிவு
(5) பனியெருத்தேரி, பிணையல் சுவடுகள், நீர்ப்பிரி நிலம், பின்னலாறு (.........)

3. 2008 ஆம் ஆண்டுக்கான (a), (b) என்னும் இரண்டு குடித்தொகைக் கூம்பகங்கள் இங்கு தரப்படுகின்றன. பின்வரும் விடைகளில் எது இப்பிரமிட்டுக்களுடன் தொடர்புடைய நாடுகளின் பெயர்களைச் சரியாகக் குறிப்பிடுகின்றது ?

(1) (a) இந்தியா, (b) சவூதி அரேபியா
(2) (a) ஐக்கிய இராச்சியம், (b) கென்யா
(3) (a) ஐக்கிய அமெரிக்கா, (b) அவுஸ்திரேலியா
(4) (a) சீனா, (b) துருக்கி
(5) (a) ஐக்கிய இராச்சியம், (b) சீனா



(a) (b)


(.........)

[பக். 02 ஐப் பார்க்க

4. முதனிலைத் தரவுகளின் மூன்று மூலாதாரங்களைத் தரும் விடை எது ?
   (1) செய்மதிப் படிமங்கள், வினாக்கொத்துக்கள், இடவிளக்கப் படங்கள்
   (2) நூலக மூலாதாரங்கள், இணையம், கலந்துரையாடல்கள்
   (3) வினாக்கொத்துக்கள், கலந்துரையாடல்கள், அவதானிப்புக்கள்
   (4) அவதானிப்புக்கள், செய்மதிப் படிமங்கள், வங்கி அறிக்கைகள்
   (5) நிலஅளவைகள், விமான ஒளிப்படங்கள், நூலக மூலாதாரங்கள் (………)

5. மையநிலைப் போக்கின் முதன்மை அளவீடான ஆகாரம் (mode) என்பது
   (1) தரவுகளின் மொத்தக் கூட்டுத்தொகையினைத், தரவுகளின் எண்ணிக்கையினால் பிரிப்பதன் மூலம் பெறப்படும் பெறுமானம்.
   (2) தரவுப் பரம்பல் ஒன்றின் அதியுயர் மீடிறனைக் காட்டும் பெறுமானம்
   (3) தரவு வரிசையொன்றின் மேல் மற்றும் கீழ் காலணைகளுக்கிடையிலான நடுப்புள்ளி
   (4) தரவு வரிசையொன்றின் உயர் பெறுமானத்தைத் தரும் இலக்கம்
   (5) தரவுப் பரம்பல் ஒன்றின் உயர்வு மற்றும் இழிவுப் பெறுமானங்களுக்கிடையிலான வேறுபாடு (………)

6. இழைய வரையம் ஒன்றினையும், மீடிறன் பல்கோணி ஒன்றினையும் எந்த வரைபடம் காட்டுகின்றது ?



(1) (2) (3) (4) (5)

(………)

7. தரவுப் பரம்பலொன்றில் மூன்று பிரிக்கை அளவீடுகளை எந்த விடை குறிப்பிடுகின்றது ?
   (1) இணைவுக் குணகம், பிற்செலவு, ஆகாரம்
   (2) சராசரி, நியம விலகல், சராசரி விலகல்
   (3) வீச்சு, இடைக் காலணை வீச்சு, நியம விலகல்
   (4) பிற்செலவு, காலணை விலகல், இடையம்
   (5) நியம விலகல், ஆகாரம், பிற்செலவு (………)

8. புவியியல் தகவல் முறைமையின் நுட்பங்களைப் பயன்படுத்தி வரையப்படும் இறுதிப் படத்தில் உள்ள அடிப்படை மூலகங்களாவன
   (1) அளவுத்திட்டம், ஆட்கூறுகள், எறியம், தலைப்பு, சட்டம்
   (2) சட்டம், தலைப்பு, திசை, அளவுத்திட்டம், குறிவிளக்கம்
   (3) கருப்பொருள், எறியம், இடவமைவு, ஆட்கூறுகள், சட்டம்
   (4) திசை, சட்டம், கருப்பொருள், இடவமைவு, எறியம்
   (5) சட்டம், கருப்பொருள், ஆட்கூறுகள், இடவமைவு, அளவுத்திட்டம் (………)

9. தொலையுணர்வு (RS) நுட்பங்களின் மூலம் பெறப்படும் தகவல்கள் முன்வைக்கப்படும் **மூன்று** பிரதான வழிகளாவன
   (1) கருப் படங்கள், இடவிளக்கப்படங்கள், இலக்க முறைப் படங்கள்
   (2) குத்தான ஒளிப்படங்கள், கிடையான ஒளிப்படங்கள், செய்மதிப் படிமங்கள்
   (3) 3D படங்கள், கருப் படங்கள், ஒத்திசைவுப் படங்கள்
   (4) விமான ஒளிப்படங்கள், செய்மதிப் படிமங்கள், பூகோள நிலைப்படுத்தல் முறைமையிலிருந்து பெறப்படும் படங்கள் (GPS)
   (5) இலக்க முறைப் படங்கள், GPS படங்கள், கிடையான ஒளிப்படங்கள் (………)


10. புவியியல் தகவல் முறைமையின் பிரதான தொழிற்பாடுகளை அவற்றின் வரிசை முறை ஒழுங்கில் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது ?
   (1) சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், மற்றும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்
   (2) தேக்கிவை, கட்புலனாக்குதல், மற்றும் புவி - இடம்சார் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்
   (3) பெறுதல், நேரப்படுத்தல், மற்றும் புவி - இடம்சார் தரவுகளை ஒழுங்குபடுத்தல்
   (4) சேகரித்தல், நேரப்படுத்தல், மற்றும் தகவல்களை முன்வைத்தல்
   (5) சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், மற்றும் தரவுகளை வெளியிடுதல் (………)

11. புவி - ஒழுங்கின் உப - ஒழுங்குகளாவன
   (1) கற்கோளம், நீர்க்கோளம், படைமண்டலம், உயிர்க்கோளம்
   (2) கற்கோளம், நீர்க்கோளம், வளிமண்டலம், மாறன்மண்டலம்
   (3) கற்கோளம், உயிர்க்கோளம், வளிமண்டலம், நீர்க்கோளம்
   (4) கற்கோளம், நீர்க்கோளம், வளிமண்டலம், புறமண்டலம்
   (5) கற்கோளம், அயன்மண்டலம், படைமண்டலம், உயிர்க்கோளம் (………)

[பக். 03 ஐப் பார்க்க


12. கீழே குறிப்பிடப்பட்ட பின்வரும் சோடிகளுள் எது அடையற்பாறை வகையைச் சேர்ந்தது ?
(1) கொண்டலைற் மற்றும் டொலறைட்
(2) எரிமலைக் குழம்புப்பாறை மற்றும் தொலைமைற்று
(3) வன்கல் மற்றும் உருண்டைக் கற்றிரள்கள்
(4) கருங்கல் மற்றும் எரிமலைக் குழம்புப்பாறை
(5) மாக்கல் மற்றும் உறைகளிக்கல் (.........)

13. A, B, C மற்றும் D என்பவற்றினால் குறிக்கப்பட்டுள்ள எரிமலை வெடிப்புகளின் நான்கு வகைகளுக்குரிய விளக்கப்படங்கள் கீழே தரப்பட்டுள்ளன. பின்வருவனவற்றுள் எது சரியான விடையைத் தருகின்றது ?




(1) (A) ஹாவாய்யன் (B) ஸ்ரோம்போலியன் (C) விசுவியன் (D) பிளினியன்
(2) (A) ஹாவாய்யன் (B) விசுவியன் (C) பிளினியன் (D) ஸ்ரோம்போலியன்
(3) (A) பிளினியன் (B) ஹாவாய்யன் (C) ஸ்ரோம்போலியன் (D) விசுவியன்
(4) (A) ஸ்ரோம்போலியன் (B) விசுவியன் (C) பிளினியன் (D) ஹாவாய்யன்
(5) (A) பிளினியன் (B) விசுவியன் (C) ஸ்ரோம்போலியன் (D) ஹாவாய்யன் (.........)

14. கீழே காட்டப்படும் வரைபடத்தில் கரையோரத்தின் படிதலுக்குரிய அம்சங்கள் A, B, C மற்றும் D ஆல் குறித்துக் காட்டப்பட்டுள்ளன.




பின்வரும் விடைகளுள் எது அவற்றைச் சரியாக அடையாளம் செய்கின்றது ?
(1) (A) ரொம்போலோ (B) தடுப்புக் கடற்கரை (C) வளைவான கூழாங்கன்னாக்கு (D) கூழாங்கன்னாக்கு
(2) (A) கூழாங்கன்னாக்கு (B) ரொம்போலோ (C) தடுப்புக் கடற்கரை (D) வளைவான கூழாங்கன்னாக்கு
(3) (A) தடுப்புக் கடற்கரை (B) வளைவான கூழாங்கன்னாக்கு (C) கூழாங்கன்னாக்கு (D) ரொம்போலோ
(4) (A) வளைவான கூழாங்கன்னாக்கு (B) கூழாங்கன்னாக்கு (C) ரொம்போலோ (D) தடுப்புக் கடற்கரை
(5) (A) வளைவான கூழாங்கன்னாக்கு (B) தடுப்புக் கடற்கரை (C) ரொம்போலோ (D) கூழாங்கன்னாக்கு (.........)

[பக். 04 ஐப் பார்க்க

09701

15. வடகோளத்திலுள்ள வியாபாரக் காற்றுகள் இங்கிருந்து வீசுகின்றன
   (1) தென் - மேற்கிலிருந்து (5° – 30° இடையில்)
   (2) வட - கிழக்கிலிருந்து (5° – 30° இடையில்)
   (3) தென் - மேற்கிலிருந்து (10° – 30° இடையில்)
   (4) வட - கிழக்கிலிருந்து (0° – 30° இடையில்)
   (5) வட - மேற்கிலிருந்து (0° – 30° இடையில்) (.........)

16. எல் – நினோ தோற்றப்பாட்டுக்குப் பொறுப்பான காரணியைப் பின்வரும் விடைகளுள் எது சரியாகக் கூறுகின்றது ?
   (1) கிழக்கு பசுபிக் சமுத்திரம் வெப்பமடைவதினால் உருவாக்கப்படும் அசாதாரண ஒரு வானிலைப் பாங்கு
   (2) பசுபிக் சமுத்திரத்தின் வானிலைப் பாங்கினில் இடம்பெறும் பருவகால மாற்றங்கள்
   (3) அத்திலாந்திக் சமுத்திரத்திலுள்ள அசாதாரண ஒரு வானிலைப் பாங்கு
   (4) பசிபிக் சமுத்திரத்தின் வானிலைப் பாங்கில் நாளாந்த மாற்றங்கள்
   (5) அத்திலாந்திக் சமுத்திரத்தின் வானிலைப் பாங்கில் பருவகால மாற்றங்கள் (.........)

17. சர்வதேச/ பிராந்திய நிறுவனமொன்றின் கொள்கைக் கூற்றானது (mission statement) கீழே தரப்படுகின்றது:

   "எதிர்கால சந்ததியினரின் நலன்களைப் பாதிக்காத வகையில் மக்களும் தேசங்களும் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் அதற்கு ஊக்கத்தையும் தகவல்களையும் வழங்குவதனூடாக சூழல் மீதான அக்கறையைப் பேணுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கவும் பங்காண்மையை ஊக்குவிக்கவும்."

   பின்வரும் சர்வதேச/ பிராந்திய நிறுவனங்களில் எது இக்கொள்கைக் கூற்றினைக் கொண்டிருக்கிறது ?
   (1) உலக வனவிலங்கு நிதியம் (WWF)
   (2) இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)
   (3) சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவகம் (IWMI)
   (4) ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP)
   (5) தென்னாசிய ஒத்துழைப்பிற்கான சூழல் நிகழ்ச்சித்திட்டம் (SACEP) (.........)

18. இலங்கையில் சூறாவளிகள் பிரதானமாக இடம்பெறும் காலப் பகுதியானது
   (1) மே தொடக்கம் யூன் வரை
   (2) மார்ச் தொடக்கம் ஏப்ரல் வரை
   (3) ஒக்ரோபர் தொடக்கம் டிசெம்பர் வரை
   (4) டிசெம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை
   (5) ஓகஸ்ற் தொடக்கம் செப்ரெம்பர் வரை (.........)

19. ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 2 ஆம் திகதியில் கொண்டாடப்படுவது
   (1) பூமி மாதா தினம்
   (2) உலக சூழல் தினம்
   (3) உலக ஈரநிலங்கள் தினம்
   (4) உலக நீர்த் தினம்
   (5) ஒசோன் படையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் (.........)

20. இலங்கையில் தேசிய பூங்கா ஒன்றினதும் **மற்றும்** தடைசெய்யப்பட்ட இயற்கை ஒதுக்கிடமொன்றினதும் பெயர்களைப் பின்வரும் விடைகளுள் எது உள்ளடக்குகின்றது ?
   (1) லுணுகம்வெகர மற்றும் சேருவில (2) நக்கிள்ஸ் மற்றும் மதுறுஓயா
   (3) யால மற்றும் வெட்டகிர கந்த (4) மதுறுஓயா மற்றும் றிட்றிகல
   (5) நக்கியாதெனிய மற்றும் ஹக்கல (.........)

21. பின்வரும் விடைகளுள் எது, (A) உயர் பிறப்பு வீதம் மற்றும் (B) குடிப்புள்ளியியல் நிலைமாற்றக் கோட்பாட்டிற்கிணங்க விரைவாக வீழ்ச்சியடைந்து வரும் இறப்பு வீதம் ஆகியவற்றின் நிலைகளைச் சரியாக இனங்காண்கின்றது ?
   (1) (A) நிலை 1 (B) நிலை 2
   (2) (A) நிலை 2 (B) நிலை 3
   (3) (A) நிலை 2 (B) நிலை 4
   (4) (A) நிலை 3 (B) நிலை 4
   (5) (A) நிலை 1 (B) நிலை 3 (.........)

[பக். 05 ஐப் பார்க்க

22. 2004 - 2009 காலப் பகுதியில் உலகின் நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளில் **வறுமை மட்டத்திற்கு** கீழ் வாழும் குடித்தொகையின் சதவீதம் கீழே தரப்படுகின்றது:
(A) 21 (B) 35 (C) 45 (D) 70
இத்தரவுகளுடன் தொடர்புடைய நாடுகளைப் பின்வரும் விடைகளுள் எது சரியாக இனங்காண்கின்றது ?
(1) (A) பாகிஸ்தான் (B) நைஜீரியா (C) மாலைதீவு (D) பங்களாதேஷ்
(2) (A) மாலைதீவு (B) பங்களாதேஷ் (C) பாகிஸ்தான் (D) நைஜீரியா
(3) (A) பாகிஸ்தான் (B) மாலைதீவு (C) நைஜீரியா (D) பங்களாதேஷ்
(4) (A) மாலைதீவு (B) பாகிஸ்தான் (C) பங்களாதேஷ் (D) நைஜீரியா
(5) (A) மாலைதீவு (B) பங்களாதேஷ் (C) நைஜீரியா (D) பாகிஸ்தான் (.........)

23. "1960 களில் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்ட **பிரதேசம்** பசுமைப் புரட்சியின் காரணமாக 25 வருடங்களுக்கிடையில் சனத்தொகையில் 70% அதிகரிப்பைக் கொண்டிருந்தபோதும் கூட உணவில் மிகை நிலையை அடைந்து கொண்டது."
மேலேயுள்ள கூற்றில் விவரிக்கப்பட்ட பிரதேசத்தின் பெயரைப் பின்வரும் விடைகளுள் எது சரியாகத் தருகின்றது ?
(1) தென்னாசியா
(2) தென்கிழக்காசியா
(3) மெக்சிக்கோ மற்றும் தென் அமெரிக்கா
(4) கிழக்கு ஆசியா
(5) ஆபிரிக்காவில் சாகேல் பிரதேசம் (.........)

24. "50% க்கு மேற்பட்ட உயர் - தொழினுட்ப ஏற்றுமதிகளின் பெறுமானத்திற்கு நான்கு பொருளாதாரங்கள் பங்களிக்கின்றன."
இந்த நான்கு ஏற்றுமதிப் பொருளாதாரங்களின் பெயர்களைப் பின்வரும் விடைகளுள் எது தருகின்றது ?
(1) யப்பான், சிங்கப்பூர், மலேசியா, இஸ்ரவேல்
(2) சீனா, ஐரோப்பிய ஒன்றியம் - 27, ஐக்கிய அமெரிக்கா, யப்பான்
(3) யப்பான், ஐரோப்பிய ஒன்றியம் - 27, சீனா, தென் கொரியா
(4) சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, தென் கொரியா
(5) சீனா, யப்பான், இந்தியா, ஐக்கிய அமெரிக்கா (.........)

25. 2010 இன் மானிட அபிவிருத்தி அறிக்கையின்படி, தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து தென் ஆசியா நாடுகளுக்கான பிறப்பில் வாழ்வு எதிர்பார்ப்புக் காலம் கீழே தரப்படுகின்றது.
(A) 67.2 (B) 72.3 (C) 74.4 (D) 66.8 (E) 64.4
இத்தரவுகளைக் காட்டும் நாடுகளைப் பின்வரும் விடைகளுள் எது சரியாக அடையாளம் செய்கின்றது ?
(1) (A) பாகிஸ்தான் (B) மாலைதீவு (C) இலங்கை (D) பூட்டான் (E) இந்தியா
(2) (A) இந்தியா (B) இலங்கை (C) மாலைதீவு (D) பாகிஸ்தான் (E) பூட்டான்
(3) (A) பாகிஸ்தான் (B) இலங்கை (C) இந்தியா (D) பூட்டான் (E) மாலைதீவு
(4) (A) இலங்கை (B) பாகிஸ்தான் (C) மாலைதீவு (D) பூட்டான் (E) இந்தியா
(5) (A) மாலைதீவு (B) இலங்கை (C) பூட்டான் (D) இந்தியா (E) பாகிஸ்தான் (.........)

26. 2009 இல் இலங்கைக்கு அதிகளவில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் நாடுகளது பெயர்களைப் பின்வரும் விடைகளுள் எது **இறங்குவரிசையில்** தருகின்றது ?
(1) பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, அவுஸ்திரேலியா
(2) இந்தியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி
(3) ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, யப்பான்
(4) இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா
(5) யப்பான், இந்தியா, ஜேர்மனி, தாய்லாந்து (.........)

27. **அபதைற்று (apatite), களிக்கல் மற்றும் பென்சிற்கரி** படிவுகளைப் பெருமளவு கொண்ட, A, B மற்றும் C ஒழுங்கில் காணப்படும் இலங்கையின் மாகாணங்களைப் பின்வரும் விடைகளுள் எது சரியாக இனங்காண்கின்றது ?
(1) (A) வட மேல் (B) மேல் (C) மத்திய
(2) (A) மத்திய (B) சப்பிரகமுவ (C) மேல்
(3) (A) வட மத்திய (B) மத்திய (C) வட மேல்
(4) (A) சப்பிரகமுவ (B) மத்திய (C) மேல்
(5) (A) மேல் (B) வட மேல் (C) மத்திய (.........)

[பக். 06 ஐப் பார்க்க

28. இலங்கையில் அதிகளவு நீர்ப்பாசனப் பரப்பளவினைக் கொண்ட பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் பெயர்களைப் பின்வரும் விடைகளுள் எது **இறங்குவரிசையில்** சரியாகத் தருகின்றது ?
    (1) சேனநாயக்க சமுத்திரம், பராக்கிரம சமுத்திரம், இராட்சதக் குளம்
    (2) உடவளவை, இராட்சதக் குளம், சேனநாயக்க சமுத்திரம்
    (3) சேனநாயக்க சமுத்திரம், உடவளவை, இராஜாங்கனை
    (4) உடவளவை, சேனநாயக்க சமுத்திரம், பதவியா
    (5) சேனநாயக்க சமுத்திரம், உடவளவை, லுணுகம்வெகர (.........)

29. 2008-2009 இலங்கை நாட்டுக்கான அறிக்கையின் புதிய நூற்றாண்டுக்கான அபிவிருத்தி நோக்கங்களின் படி வறுமை தலைக் கணிப்புச் சுட்டெண்ணானது (Poverty Head Count Index) தேசிய சராசரியான 15.2 என்பதை விட **இரண்டு மடங்கு மேலாகக்** காணப்படும் இரண்டு மாவட்டங்களின் பெயர்களைப் பின்வரும் விடைகளுள் எது தருகின்றது ?
    (1) இரத்தினபுரி, புத்தளம்
    (2) ஹம்பாந்தோட்டை, கேகாலை
    (3) பொலன்னறுவை, பதுளை
    (4) புத்தளம், மொனராகலை
    (5) நுவரெலியா, மொனராகலை (.........)

30. இலங்கையில் முறையே 2008, 2009, 2010 ஆண்டுகளுக்கான சராசரி நெல் விளைச்சலைப் பின்வரும் விடைகளுள் எது சரியாகத் தருகின்றது ?
    (1) 2551, 2700, 3518 கிலோ/ஹெக்டயர்
    (2) 3800, 3912, 3915 கிலோ/ஹெக்டயர்
    (3) 4182, 4330, 4528 கிலோ/ஹெக்டயர்
    (4) 4428, 4555, 5100 கிலோ/ஹெக்டயர்
    (5) 5100, 5222, 5235 கிலோ/ஹெக்டயர் (.........)

❊❊

The National e-learning Portal for The General Education

සියලු ම හිමිකම් ඇව්රිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

භූගෝල විද්‍යාව I
புவியியல் I
Geography I

22 T I

※ **முதலாம்** வினாவுக்கும், 2 ஆம், 3 ஆம் வினாக்களிலிருந்து **ஒரு** வினாவையும் தெரிந்தெடுத்து **இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை** எழுதுக.
※ 1:50 000 அளவுத்திட்டத்திலமைந்த இரத்தினபுரியின் இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும்,வரைபுத் தாளொன்றும் வழங்கப்படும்.

## பகுதி II

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50 000 என்னும் அளவுத் திட்டத்திலமைந்த இரத்தினபுரியின் இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகளின் இடைவெளிகள் 20 மீற்றரினால் காட்டப்பட்டுள்ளன. இப்படத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு:
※ **படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது.**
※ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
※ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் தரைத்தோற்றத்தின் **இரண்டு** பிரதான அம்சங்களையும் வடிகால் பாங்கின் **இரண்டு** பிரதான அம்சங்களையும் படத்திலிருந்து எடுக்கப்பட்ட புனையா வரைபடங்களினைப் பயன்படுத்தி அமைத்துக் காட்டுவதுடன் பிரதேசத்தின் பௌதிக நிலக் காட்சியினையும் பாகுபடுத்துக. *(09 புள்ளிகள்)*

(ii) பிரதான நதி (களு கங்கை) நெடுகிலும் காணப்படும் நிர்வாக எல்லையினைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(iii) களு கங்கையின் இரு பக்கங்களிலும் காணப்படும் சமவுயரக் கோட்டின் பெறுமானத்தினைத் தருக. *(01 புள்ளி)*

(iv) பிரதேசத்தில் காணப்படும் நிலப் பயன்பாட்டின் இடஞ்சார்ந்த பாங்கு பற்றிச் சுருக்கமான விளக்கமொன்றினைத் தருக. *(04 புள்ளிகள்)*

(v) இப்பிரதேசத்தின் வீதி முறைமையை அமைப்பதற்குப் பௌதிக நிலக்காட்சி எத்தகையதோர் அடிப்படையைக் கொண்டிருக்கின்றதென்பதை படத்திலிருந்து எடுக்கப்பட்ட புனையா வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

2. (i) செய்முறைப் புவியியலின் விருத்திக்குப் புதிய படவரைகலையியல் நுட்பங்கள் எந்தளவுக்குப் பங்களித்துள்ளதென்பதைச் சுருக்கமாக விளக்குக. *(03 புள்ளிகள்)*

(ii) புவியியல் தகவல் முறைமையினை (GIS) உபயோகித்துப் படமொன்றினை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் **மூன்று** பிரதான தரவு மூலாதாரங்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) மேலே (ii) இல் உம்மால் பெயரிடப்பட்ட மூலாதாரங்களுள் **இரண்டினைத்** தெரிவு செய்து பொருத்தமான உதாரணங்கள் தந்து, அவை ஒவ்வொன்றினைப் பற்றியும் சிறுகுறிப்புரை எழுதுக. *(06 புள்ளிகள்)*

(iv) படங்களை அமைத்தல் **மற்றும்** தரவுப் பகுப்பாய்வுக்கு GIS நுட்பங்களைப் பிரயோகிப்பதினால் ஏற்படும் அனுகூலங்களைப் பரிசீலிக்குக. *(08 புள்ளிகள்)*

[பக். 08 ஐப் பார்க்க

3. (i) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள பச்சைத் தரவுகளைப் பயன்படுத்தி தரவு வரிசை (data array) மற்றும் வரவுக் குறியினை (tally) ஒழுங்குபடுத்தி அவை இரண்டிற்குமிடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

**அட்டவணை 1**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 125 | 206 | 229 | 125 | 265 | 135 | 275 |
| 206 | 400 | 226 | 368 | 381 | 425 | 368 |
| 511 | 438 | 361 | 600 | 135 | 511 | 400 |
| 600 | 425 | 511 | 608 | 135 | 206 | 608 |

(ii) மேலே (i) இல் உம்மால் ஒழுங்குபடுத்தப்பட்ட வரவுக் குறியினைப் பயன்படுத்திக் கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் ஒன்றினைத் தருக. *(03 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் கம்பஹா, களுத்துறை, காலி மாவட்டங்களில் 2008 - 2010 காலத்திற்குரிய யால பருவத்தின் நெல் உற்பத்தி (மெற்றிக் தொன்னில்) **அட்டவணை 2** இல் தரப்படுகின்றது.
அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி ஒப்பீட்டு பார் வரைபு (Comparative Bar Graph) ஒன்றினை அமைக்குக.

**அட்டவணை 2**

| மாவட்டங்கள் | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|
| கம்பஹா | 20 592 | 23 329 | 24 475 |
| களுத்துறை | 27 454 | 34 387 | 29 527 |
| காலி | 32 005 | 30 684 | 26 612 |

*மூலம்* : புள்ளிவிவரவியல் மற்றும் குடித் தொகைக் கணிப்புத் திணைக்களம் - 2011. *(06 புள்ளிகள்)*

(iv) 2008 - 2010 காலத்தில் கம்பஹா, களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட கால ரீதியான மற்றும் பிரதேச ரீதியான மாற்றங்களை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்க. *(06 புள்ளிகள்)*

* * *

The National e-learning Portal for the General Education

22 | I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

භූගෝල විද්‍යාව I (II කොටස) (ප්‍රායෝගික භූගෝල විද්‍යාව)
புவியியல் I (பகுதி II) (செய்முறைப் புவியியல்)
Geography I (Part II) (Practical Geography)




SCALE 1: 50 000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර් 20
சமவுயரக்கோட்டு இடைவெளி 20 மீற்றர்
Contour Interval 20 m.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

භූගෝල විද්‍යාව II
புவியியல் II
**Geography II**

**22 T II**

පැය තුනයි
***மூன்று மணித்தியாலம்***
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

❊ ஒவ்வொரு பகுதியிலுமிருந்தும் குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

❊ அரசியல் எல்லைகளைக் காட்டும் இரண்டு உலகப் படங்கள்
❊ இரும்புத்தாதுப் படிவுகள் மற்றும் நிலக்கரி வயல்களைக் காட்டும் ஓர் உலகப்படம்
❊ கெப்பனின் பாகுபாட்டின்படி பிரதான காலநிலை வகையொன்றின் எல்லைகளைக் காட்டும் தென் மற்றும் தென் கிழக்காசியப் படம் ஒன்று
❊ அரசியல் எல்லைகளைக் காட்டும் தென் ஆசியப் படம் ஒன்று
❊ சீனா மற்றும் இந்தியா வெளியுருவப் படங்கள் இரண்டு
❊ நகரங்களின் பரம்பலைக் காட்டும் இலங்கைப் படம் ஒன்று
❊ மாவட்ட எல்லைகளைக் காட்டும் இலங்கைப் படம் இரண்டு

ஆகியன வழங்கப்படும்.

## பகுதி I - பௌதிகப் புவியியல்

1. (i) புவியோட்டின் **மூன்று** வகையான குறைகளையும் (faults) **மூன்று** வகையான மடிப்புகளையும் (folds) பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

   (ii) இழுவிசைகள் மூலம் குறைகள் எவ்வாறு உருவாகின்றன என்பதை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iii) அமுக்க விசைகள் மூலம் குறைகளும் மடிப்புகளும் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) "புவியின் பெரும்பாலான எரிமலை வெடிப்பு மற்றும் புவிநடுக்கங்களின் உயிர்ப்புப் பகுதிகள் புவியோட்டு விருத்திக்குரிய எல்லைகள் நெடுகிலும் அமைந்துள்ளன." பொருத்தமான உதாரணங்கள் மற்றும் வரைபடங்கள் மூலம் விளக்குக. *(07 புள்ளிகள்)*

2. (i) பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தி கெப்பனின் உலகக் காலநிலைப் பாகுபாட்டின் பிரதான காலநிலை வகைகளைப் பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

   (ii) தரப்பட்டுள்ள தென் மற்றும் தென் கிழக்காசியப் படத்தில் கெப்பனின் உலகக் காலநிலைப் பாகுபாட்டில் பிரதான காலநிலை வகையொன்றின் உப - வகைகளின் எல்லைகள் காட்டப் பட்டுள்ளன.

   (அ) உப வகைகளுக்குரிய சரியான குறியீடுகளைப் **படத்தில்** எழுதுக.

   (ஆ) படத்தில் காட்டப்பட்டுள்ள பெட்டிக்குள்ளே குறியீடுகளுடன் தொடர்புடைய உப வகைகளின் பெயர்களை எழுதுக. *(03 புள்ளிகள்)*

   (iii) மேலே (ii) இல் உம்மால் பெயரிடப்பட்ட ஏதாவது **ஒரு** உப - வகையொன்றினைத் தெரிவு செய்து அதன் முனைப்பான காலநிலைச் சிறப்பியல்புகளை ஆராய்க. *(04 புள்ளிகள்)*

   (iv) உம்மால் மேலே (iii) இல் தெரிவுசெய்யப்பட்ட உப வகைக் காலநிலை மனித நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக. *(08 புள்ளிகள்)*

3. (i) தரப்பட்டுள்ள உலகப் படத்தில் அயன உயிரினக் கூட்டங்களில் (biomes) **இரண்டு** பிரதான வகைகளைக் குறித்துப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

   (ii) மேலே (i) இல் உம்மால் குறிப்பிடப்பட்ட இரண்டு அயன உயிரினக் கூட்டங்களில் உள்ள தாவரத்தின் முனைப்பான சிறப்பியல்புகளை ஒப்பீடு செய்க. *(04 புள்ளிகள்)*

   (iii) தரப்பட்டுள்ள படத்தில் இலங்கையின் **இரண்டு** வகையான புல்நிலங்களின் பரம்பலினைக் குறித்துப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

   (iv) மேலே (iii) இல் உம்மால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு புல்நில வகைகளின் பிரதான சிறப்பியல்புகளைப் பின்வரும் தலையங்கங்களின் கீழ் ஆராய்க.

   (அ) காலநிலை (ஆ) தாவர வர்க்கம் (இ) மனித நடவடிக்கைகள் *(08 புள்ளிகள்)*

[பக். 02 ஐப் பார்க்க

4. (i) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் **மூன்று** கரையோரச் சூழற் தொகுதிகளைக் குறித்துப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் தெரிவு செய்யப்பட்ட சூழற் தொகுதிகளுள் **இரண்டினைத்** தெரிவு செய்து அவற்றின் முனைப்பான சிறப்பியல்புகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) கரையோரச் சூழற் தொகுதியின் சூழலியல் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக ஆராய்க. (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் கரையோரச் சூழற் தொகுதிகள் மீது மனித நடவடிக்கைகளினால் ஏற்படும் **இரண்டு** பிரதான பாதகமான தாக்கங்களைச் சுருக்கமாக விவரித்து இலங்கையின் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள **இரண்டு** கட்டுப்பாட்டு முறைகளைத் தர்க்கரீதியாகப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி II - மானிடப் புவியியல்

5. (i) தரப்பட்டுள்ள உலகப் படத்தில் உலகின் உயர் குடித்தொகை அடர்த்தி கொண்ட **நான்கு** பிரதேசங்களைக் குறித்துப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) "உலகின் சமனற்ற சனத்தொகைப் பரம்பலானது பௌதிக மற்றும் மானிடக் காரணிகள் இரண்டினதும் விளைவாகும்" (Goldscheider, 2004). இலங்கை தவிர்ந்த ஏனைய நாடுகளிலிருந்து உதாரணங்கள் தந்து இக்கூற்றினைப் பரிசீலிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையின் தென் மாகாணத்திலும் வட மத்திய மாகாணத்திலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக குடித்தொகை வளர்ச்சி மற்றும் அடர்த்தியில் ஏற்பட்ட மாற்றங்களுக்குப் பங்களித்துள்ள **மூன்று** பிரதான காரணிகளை ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் உதாரணங்கள் தந்து ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) "2000 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் சர்வதேச வெளி - இடப் பெயர்வின் (emigration) பாங்கானது **இரண்டு** வெவ்வேறு **பிரதேச சேர்விடங்கள்** நோக்கிய தெளிவானதொரு நகர்வினைக் காட்டுகின்றது." அத்தகைய அம்சங்களுக்கான காரணங்களைத் தந்து இக்கூற்றினை ஆராய்க. (06 புள்ளிகள்)

6. (i) நகரக் குடியிருப்பொன்றின் **நான்கு** முனைப்பான அம்சங்களை விவரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) கீழே அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி,

(அ) 2000 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தென்னாசிய நாடுகளின் நகராக்க மட்டத்தில் அவதானிக்கப்பட்டுள்ள பிரதேசரீதியான மாறுபாடுகளை ஆராய்க.

(ஆ) 2020 ஆம் ஆண்டளவில் இத்தென்னாசிய நாடுகளின் நகராக்க மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களுக்கான காரணங்களை விளக்குக.

**அட்டவணை 1**

தெரிந்தெடுக்கப்பட்ட தென்னாசிய நாடுகளின்

நகராக்க மட்டம் (சதவீதங்கள்)

| நாடு | வருடங்கள் | |
|---|---|---|
| | **2000** | **2020*** |
| பங்களாதேஷ் | 23.6 | 33.9 |
| பூட்டான் | 25.5 | 47.7 |
| இந்தியா | 27.7 | 34.3 |
| நேபாளம் | 13.4 | 23.9 |
| பாகிஸ்தான் | 33.1 | 42.8 |

* எதிர்வு கூறப்பட்டது.

மூலங்கள் : UN Habitat, Global Urban Observatory, 2008 and UN Population Division : World Urbanization Prospects : The 2007 Revision (06 புள்ளிகள்)

(iii) தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நகரக் குடியிருப்புக்களை இனங்கண்டு பெயரிடுக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் மேல் மாகாணத்தில் (கொழும்பு தலைநகரப் பிரதேசம்) அதிகளவான நகரக் குடியிருப்புக்களின் செறிவுக்குப் பொறுப்பான **நான்கு** காரணிகளை ஆராய்க. (04 புள்ளிகள்)

[பக். 03 ஐப் பார்க்க

7\. (i) கீழே பட்டியலிலிருந்து தெரிவுசெய்து, தரப்பட்டுள்ள உலகப் படத்தில் இரும்புத்தாதுப் படிவுகளையும் (**1-5** எனக் குறிக்கப்பட்டுள்ளது.) மற்றும் நிலக்கரி வயல்களையும் (**A-E** எனக் குறிக்கப்பட்டுள்ளது) இனங்கண்டு பெயரிடுக.

(அ) மினாஸ் ஜெரேய்ஸ், மெசாபி, சிங்ஜிங், ரான்ஸ்வால், பில்பராவிலுள்ள ஹமர்ஸ்சிலி தொடர்

(ஆ) அப்பலாச்சியன்ஸ், ஷான்ஸ்ஷி, நோர்த்தம்பலாந்து - டேர்காம், டொன்பாஸ், ரூர் *(05 புள்ளிகள்)*

(ii) அட்டவணை 2 இலுள்ள தரவுகளைப் பயன்படுத்தி, 2001 - 2010 காலப் பகுதியில் உலகின் உருக்கு உற்பத்தியின் மாற்றமடைந்து வரும் பாங்கினை பிரதான உற்பத்தியாளர்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. *(03 புள்ளிகள்)*

**அட்டவணை 2**

நாடுகள்/ பிரதேசரீதியான உலகின் முன்னணி உருக்கு உற்பத்தியாளர்கள்
உருக்கு உற்பத்தியின் சதவீதப் பங்கு

| நாடு/ பிரதேசம் | 2001 | 2006 | 2010 |
|---|---|---|---|
| சீனா | 17.7 | 33.8 | 44.3 |
| ஐரோப்பிய ஒன்றியம் * | 22.0 | 16.5 | 12.2 |
| யப்பான் | 12.1 | 9.3 | 7.8 |
| ஐக்கிய அமெரிக்கா | 10.6 | 7.9 | 5.7 |
| ரூஷியா | 6.9 | 5.7 | 4.7 |
| இந்தியா | 3.2 | 4.0 | 4.7 |

*மூலம்* : International Iron and Steel Institute, 2008 and World Steel Association, 2011.

(iii) (அ) சீனா **அல்லது** இந்தியாவில் இரும்பு மற்றும் உருக்குக் கைத்தொழிலின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ள காரணிகளைத் தரப்பட்டுள்ள படங்களைப் பயன்படுத்தி குறிப்பான உதாரணங்கள் தந்து ஆராய்க. *(07 புள்ளிகள்)*

(ஆ) ஐக்கிய அமெரிக்காவில் உருக்குக் கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்ற காரணிகளைப் பரிசீலிக்குக. *(05 புள்ளிகள்)*

8\. (i) "நவீன உலகில் பிராந்திய கட்டமைப்புக்களுக்கான தேவையொன்றுள்ளது." இக்கூற்றினைச் சுருக்கமாக ஆராய்க. *(03 புள்ளிகள்)*

(ii) தரப்பட்டுள்ள தென்னாசியப் படத்தில் தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்புக்கான கூட்டமைப்பின் (SAARC) ஆரம்பகால அங்கத்தவர்களைக் குறித்துப் பெயரிடுக. *(07 புள்ளிகள்)*

(iii) "எந்தவொரு பிராந்தியக் கூட்டமைப்பிலும் தனியொரு நாட்டின் மேலாதிக்கம் கூட்டமைப்புக்குப் பாதகமானதாக அமையலாம்." இந்தியாவின் மேலாதிக்கச் செல்வாக்கு சார்க்கின் முனைப்பானதொரு அம்சமாகக் காணப்படுகிறதா என்பதனை மேலேயுள்ள கூற்றுடன் தொடர்புபடுத்திக் காரணங்கள் தந்து ஆராய்க. *(06 புள்ளிகள்)*

(iv) ஆபிரிக்கக் கண்டத்தில் வளர்முக நாடுகளின் பொருளாதாரங்களை வலுப்படுத்துவதற்கு ஆபிரிக்காவுக்கான பொருளாதார ஆணைக்குழு (ECA) எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றதென்பதை விவரிக்குக. *(04 புள்ளிகள்)*

※※※


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

**22 II** භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II

I කොටස (භෞතික භූගෝල විද්‍යාව) / புவியியல் I (பௌதிகப் புவியியல்) / Part I (Physical Geography)

ප්‍රශ්න අංකය / வினா இல / Question No. **2 (ii)**

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..........................




| | සංකේත<br>குறியீடு<br>Symbols | උප කොටස<br>உப வகை<br>Sub Type |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

මෙතැනින් වෙන් කරන්න. / இங்கே வெட்டி அகற்றவும் / detach here

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

| | | |
|---|---|---|
| 22 II | භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | I කොටස (භෞතික භූගෝල විද්‍යාව)<br>புவியியல் I (பௌதிகப் புவியியல்)<br>Part I (Physical Geography) |

ප්‍රශ්න අංකය
வினா இல
Question No. } 3 (i)



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

| 22 II | භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | I කොටස<br>புவியியல் I<br>Part I |
|---|---|---|

09722

ප්‍රශ්න අංකය / வினா இல / Question No. 3 (iii)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ........................



09717

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

| | | |
|---|---|---|
| 22 II | භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | II කොටස (මානුෂ භූගෝල විද්‍යාව)<br>புவியியல் II (மானிடப் புவியியல்)<br>Part II (Human Geography) |

ප්‍රශ්න අංකය / வினா இல / Question No. 7 (i)

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................




මෙතැනින් වෙන් කරන්න / இங்கே வெட்டி அகற்றவும் / detach here

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2011**

| | | |
|---|---|---|
| **22 II** | භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>**Geography II** | II කොටස (මානුෂ භූගෝල විද්‍යාව)<br>புவியியல் II (மானிடப் புவியியல்)<br>Part II (Human Geography) |

ප්‍රශ්න අංකය
வினா இல
**Question No.** 7 (iii)

විභාග අංකය
சுட்டெண்
**Index No.** ..............................






අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2011 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2011

| 22 II | භූගෝල විද්‍යාව II<br>புவியியல் II<br>Geography II | II කොටස (මානුෂ භූගෝල විද්‍යාව)<br>புவியியல் II (மானிடப் புவியியல்)<br>Part II (Human Geography) |
|---|---|---|

ප්‍රශ්න අංකය / வினா இல / Question No. **8 (ii)**

